# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

***************************

### கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில் நோபல் வெற்றியாளர் குருதேவ் ரவீந்திரநாத் அவர்களின் மார்பளவுசிலை திறப்பு

நோபல் பரிசுபெற்ற ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் இலங்கை வருகையின் நூறாவது ஆண்டு நிறைவினை நினைவுகூரும் முகமாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் இணைந்து 2022 பெப்ரவரி 3ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வொன்றில் அப்பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் மார்பளவுசிலை திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சந்திரிகா என் விஜேரத்ன, மதிப்புக்குரிய அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்களும், கௌரவ விருந்தினர்களான இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ ஸ்ரீ கோபால் பாக்லே, மற்றும் தேசிய மரபுரிமைகள், அரங்கக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கௌரவ விதுர விக்ரமநாயக்க ஆகியோர் இந்த மார்பளவுசிலையை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினர். இந்திய அரசின் வெளியுறவு அமைச்சின் கீழான கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையினால் தாகூரின் வெண்கலத்திலான மார்பளவுசிலை பரிசளிக்கப்பட்டிருந்தது.

2. இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய கௌரவ பேராசிரியர் ஜி எல் பீரிஸ் அவர்கள் 1922, 1928 மற்றும் 1934 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவைகள் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்ட ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் உள்ளத்தில் இலங்கைக்கு தனித்துவம் மிக்க இடம் ஒன்று இருந்ததாக சுட்டிக்காட்டியிருந்தார். ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் மூன்றாவது வருகையின் பொழுது "ஸ்ரீ பாளி" வளாக அடிக்கல் நாட்டப்பட்டது. அத்துடன் அந்த விஜயத்திற்கான அழைப்பிதழ் தனது பாட்டனாரும் முன்னணி தொழிலதிபரும் சமூக மறுசீரமைப்பாளருமான திரு வில்மொட் ஏ பெரேரா அவர்களால் அனுப்பப்பட்டிருந்தது என்பதை அவர் இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்டினார். இந்தியாவிலுள்ள மேற்கு வங்காளத்தில் உள்ள சாந்திநிகேதனின் விஸ்வ பாரதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த திரு. வில்மொட் ஏ பெரேரா அவர்கள் குருதேவ் அவர்களின் பணிகள் மற்றும் சிந்தனைகளால் மிகவும் ஈர்க்கப்பட்டதுடன் அந்நிறுவனத்தின்

விழுமியங்களால் கவரப்பட்ட அவர் அதே போன்ற ஒரு நிறுவனத்தினை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு திடசங்கற்பம் பூண்டிருந்தார். அவரது அழைப்பில் இலங்கைக்கு வருகை தந்திருந்த குருதேவ் அவர்கள் 1934 மே 20ஆம் திகதி புதிய நிறுவனத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அத்துடன் இப்புதிய நிறுவனமானது ஸ்ரீ பாளி என்று அழைக்கப்பட வேண்டும் எனவும் அவர் முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. குருதேவ் தாகூர் அவர்களின் இலங்கை மீதான அன்பினை உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் சுட்டிக்காட்டியிருந்ததுடன் அந்த அன்பானது அவரை பல்வேறு வழிகளில் ஊக்குவித்திருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். தாகூர் அவர்கள் 1934-ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த போது அவர் ஆற்றிய உரைகளில் கூறப்பட்ட சில விடயங்களை உயர் ஸ்தானிகர் இங்கே மேற்கோளிட்டு குறிப்பிட்டிருந்தார்; அவர் குறிப்பிடுகையில், " இந்தியாவின் ஆன்மா ஒரு முறை இலங்கைக்கு வந்தது ...ஒரு கவிஞனாக கலையின் நேரடி மொழி மூலம் எனது முயற்சிகளிலிருந்து அந்த புராதன பிணைப்பை மீட்டெடுப்பது எனது நோக்கம்." இதேவேளை குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் சிலையை பரிசாக ஏற்றுக்கொண்டு அவரால் அடிக்கல் நாட்டப்பட்ட நிறுவனத்தில் அதனை அமைப்பதற்கு அனுமதி வழங்கியமைக்காகவும் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் மரபினை கௌரவித்தமைக்காகவும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உயர் ஸ்தானிகர் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

4. இதேவேளை, இந்தியா இலங்கை என்ற இரட்டை சகோதர உறவுகளிடையில் காணப்படும் மிகவும் நெருக்கமான கலாசார உறவுகளை சுட்டிக்காட்டிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சந்திரிகா என் விஜேரத்ன மற்றும் ஸ்ரீ பாளி வளாகத்தின் தலைவர் கலாநிதி பிரதீப மகானமஹேவ ஆகியோர், இந்தியாவில் உயர் கல்வியை தொடர்வதற்கான புலமைப்பரிசில்களை மாணவர்களுக்கு வழங◌்குதல் மற்றும் பல்கலைக்கழகத்திற்கான பல்வேறு உதவிகளுக்காக இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் தமது நன்றிகளை தெரிவித்திருந்தனர்.

5. இந்நிகழ்வின் போது “ரவீந்திர சங்கீத்” ஹிந்தி இசை, இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த நடன வடிவங்களின் தெரிவுகள் உள்ளிட்ட விசேட கலாசார நிகழ்வுகளை வழங்கியிருந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான கலாசாரப் பிணைப்பினை அதன் மூலமாக வெளிப்படுத்தியிருந்தனர். இந்த ஆற்றுகைகள் பொதுவாக மெச்சப்பட்டதுடன் சமூக ஊடகங்கள் மூலமாகவும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

6. கலைகளை கற்பதற்கான ஒரு நிலையமாக 1921 ஆம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் விஸ்வ பாரதி நிலையத்தினை ஸ்தாபித்திருந்தமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். சிங்கள பாலே நடனக் கலைஞர்களான பிரேமகுமார எபிடாவல மற்றும் தேசமான்ய சித்ரசேனா ஆகியோர் 1940களில்

சாந்திநிகேதனில் பயின்றுள்ளனர். அதேபோல எட்வின் சமரதிவாகர, சூர்ய சங்கர் மொலிகொட, ஆனந்த சமரக்கோன், சுனில் சாந்த, லியோனல் எதிரிசிங்க மற்றும் W.B. மகுலோலுவா போன்ற இலங்கையைச் சேர்ந்த பல்வேறு இசைக் கலைஞர்களும், சோமபந்து மற்றும் இசைக்கலைஞரான ஆனந்த சமரக்கோன் போன்ற ஓவியக் கலைஞர்களும் சாந்திநிகேதனில் கல்வியினை பெற்றுள்ளனர். இன்றுகூட இலங்கை உட்பட உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புலமையாளர்கள் மற்றும் கலைஞர்கள் குருதேவ் அவர்களின் மரபிலிருந்து உத்வேகத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். தாகூர் அவர்களின் கீதாஞ்சலி சிங்கள மொழியில் பல்வேறு தடவைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. குருதேவ் தாகூர் அவர்கள் மீது இலங்கை மக்கள் கொண்டிருக்கும் ஆழமான மரியாதையை இது சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பிணைப்பினை வலுவூட்டும் முகமாக குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் இலங்கை விஜயத்தின் நூறாவது ஆண்டினை குறிக்கும் முகமாக விஷேட நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்திய உயர் ஸ்தானிகராலயம் குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் பெயரில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில் அதிசிறந்த சாதனை நிகழ்த்தும் மாணவருக்கு அங்கீகாரத்தை வழங்கும் முகமாக அவரது பெயரில் தங்கப்பதக்கம் ஒன்றை நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்

*******

கொழும்பு
06 பெப்ரவரி 2022